www.Padasalai.Net

# தமிழ்நாடு ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| Dr. மா. ஆர்த்தி, இ.ஆ.ப.,<br>மாநில திட்ட இயக்குநர்<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ,<br>சென்னை– 600006. | **முதன்மைக் கல்வி அலுவலர்,**<br>அனைத்து மாவட்டங்கள். |

**ந.க.எண்.2183/ஆ8/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்: 30.09.2024**

| | |
|---|---|
| **பொருள்:** | பள்ளிக் கல்வி – 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான குறுவளமைய மற்றும் வட்டார அளவிலான போட்டிகள் – 6 முதல் 12–ம் வகுப்பு வரை மாணவர்களுக்கான வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் – குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்– சார்ந்து |
| **பார்வை:** | 1) பள்ளிக் கல்வித்துறை– ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்.2183/ஆ8/ கலைத் திருவிழா/ ஒபக/2024, நாள் : 09.08.2024<br>2) மாநில திட்ட இயக்குநரின் கடித எண் 2183/ஆ8/கலைத்திருவிழா/ஒபக/2024 நாள் 22.08.2024.<br>3) மாநில திட்ட இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்.2183/ஆ8/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்: 27.08.2024 |

**********

பார்வை–1ல் காணும் இணைச் செயல்முறைகளின்படி, 2024–2025 ஆம் ஆண்டில், 1 முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக, பள்ளி அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் நடத்துதல் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை–2ல் காணும் செயல்முறைகளின்படி 1 முதல் 5–ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான குறுவள மற்றும் வட்டார அளவிலான போட்டிகள் EMIS தளத்தின் வாயிலாகவே நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

www.Padasalai.Net

தற்போது இம்மாணவர்களுக்கான குறுவள மற்றும் வட்டார அளவிலான போட்டிகளை நேரடியாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், **குறுவள அளவிலான போட்டிகளை 14-10-2024 முதல் 16-10-2024 வரை** திட்டமிட்டு நடத்திடல் வேண்டும்.

பள்ளியளவில் நடைபெற்ற போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் **முதலிடம் பெற்ற வெற்றியாளர் மட்டுமே அடுத்த நிலை போட்டியான குறுவள அளவிலான போட்டியில் பங்குபெறுதல் வேண்டும்.** (அதாவது ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பிடித்த ஒருவர் அல்லது ஒரு குழு மட்டுமே அடுத்த நிலை போட்டியான குறுவள அளவிலான போட்டியில் பங்குபெற வேண்டும்).

வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு குறுவளமையங்களில் எங்கு போட்டிகள் நடத்தப்பட உள்ளன என்ற தகவல் முன்கூட்டியே சார்ந்த குறுவள பள்ளிகளுக்கு சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர் மூலம் தெரிவிக்கப்படுதல் வேண்டும். இக்குறுவள அளவிலான போட்டிகளை திட்டமிட்டு நடத்துவது சார்ந்து வட்டாரக் கல்வி அலுவலரின் பொறுப்பாகும்.

குறுவள அளவிலான போட்டிகளுக்கு மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக அழைத்துச்சென்று மீண்டும் கொண்டுவந்து சேர்த்தல் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

பள்ளி அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்று குறுவள அளவிலான போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் (Consent Letter from Parent) கட்டாயமாக பெறப்படுதல் வேண்டும். அவ்வாறாக பெறப்படும் ஒப்புதல் கடிதங்களை முறையாக பராமரித்தல், சார்ந்த தலைமையாசிரியரின் பொறுப்பாகும். குறுவளமையப் போட்டிகளுக்கு மாணவ, மாணவியரை அழைத்துச் செல்லும்போது உடன் ஆண் ஆசிரியர் ஒருவர், பெண் ஆசிரியை ஒருவர் செல்லுதல் வேண்டும்.

www.Padasalai.Net

**குறுவள அளவிலான அமைப்புக் குழு உறுப்பினர்கள் : (ஐவர் குழு)**

ஒவ்வொரு குறுவளமையத்திற்கும் கலைத்திருவிழாவினை நடத்துவதற்கு கீழே குறிப்பிட்டவாறு அமைப்புக் குழுவினை அமைத்தல் வேண்டும். அதாவது 1 & 2 வகுப்பு பிரிவினருக்கு, அரசுப் பள்ளிகளுக்கு ஒரு அமைப்புக் குழுவினையும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு ஒரு அமைப்புக் குழுவினையும் அதேபோன்று 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை பிரிவினருக்கும், அரசுப் பள்ளிகளுக்கு ஒரு அமைப்புக் குழுவினையும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு ஒரு அமைப்புக் குழுவினையும் தனித்தனியே அமைத்தல் வேண்டும்.

- ❖ போட்டி நடைபெறும் பள்ளியின் தலைமை ஆசிரியர் முதன்மை அமைப்பாளராக செயல்படுவார்.
- ❖ உதவி அமைப்பாளராக மேலும் ஒரு தலைமை ஆசிரியர் செயல்படுவார்.
- ❖ அப்பகுதிக்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி – 1 நபர்
- ❖ பெற்றோர் ஆசிரியர் கழகப் பிரதிநிதி – 1 நபர்
- ❖ பள்ளி மேலாண்மைக் குழு தலைவர்/உறுப்பினர் – 1 நபர்

இவ்வமைப்புக் குழுவானது, குறுவள அளவில் நடைபெறும் போட்டிக்கான இடத்தினை தேர்வு செய்தல், போட்டிக்கான நடுவர் குழுவினை தேர்வு செய்தல், நடுவர்களின் மதிப்பெண் தாள்கள் முறையாகப் பராமரிக்கப்படுதல், போட்டியின் இறுதியில் வெற்றியாளர்களை முறையாக அறிவித்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

மேலும், ஒவ்வொரு போட்டிக்குமான முதல் மூன்று இடங்களை பிடிக்கும் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட Consolidated Mark Sheet படிவத்தில் இக்குழு அமைப்பினரின் கையொப்பம் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இதன் பின்னரே நடுவர்கள் வெற்றியாளர்களை அறிவித்தல் வேண்டும். ஒவ்வொரு போட்டிக்குமான வெற்றியாளர் அறிவிக்கப்பட்டவுடன் அன்றைய தினமே அப்போட்டிக்கான வெற்றியாளர்களின் தகவல்கள் EMIS தளத்தில் உள்ளீடு

www.Padasalai.Net

செய்யப்படுதல் வேண்டும். இதனையும் அமைப்புக் குழு உறுதி செய்தல் வேண்டும்.

குறுவள அளவிலான போட்டிகள் சார்ந்த குறுவள மையத்திற்குட்பட்ட ஏதேனும் ஒரு உயர்நிலை அல்லது மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்படுதல் வேண்டும். பார்வை -2ல் கூறப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு போட்டிக்கான நடுவர்களை தேர்ந்தெடுத்து, போட்டிகளை குறுவள அளவில் நடத்தி, ஒவ்வொரு போட்டிக்குமான மதிப்பெண் தாள்களை முறையாக பராமரித்து, ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களை பெறும் வெற்றியாளர்களின் தகவல்களை EMIS தளத்தில் 17-10-2024-க்குள் அக்குறுவளத்திற்குரிய ஆசிரியர் பயிற்றுநர் Login வழியாக உள்ளீடு செய்தல் வேண்டும்.

**குறுவள அளவிலான ஒவ்வொரு போட்டியிலும் முதலிடத்தில் தேர்வான வெற்றியாளர் மட்டுமே சார்ந்த வட்டார அளவிலான போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.** அனைத்து குறுவளமையங்களின் வெற்றியாளர்களின் தகவல்கள் EMIS தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்வது வட்டாரக் கல்வி அலுவலர், வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர்களின் பொறுப்பாகும்.

**வட்டார அளவிலான போட்டிகள்:**

1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகள் குறித்த மேலும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு.

- 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில், ஒவ்வொரு வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு குறுவள அளவில் முதல் இடம் பெற்ற மாணவர்களைக் கொண்டு வட்டார அளவிலான போட்டிகள் அரசுப் பள்ளிகளுக்கு தனியாகவும், அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும் நடத்தப்பட வேண்டும்.

www.Padasalai.Net

- 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில், ஒவ்வொரு வட்டாரத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் நடத்தப்பட்ட கலைத்திருவிழா போட்டிகளில், ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற மாணவர்களைக் கொண்டு வட்டார அளவிலான போட்டிகள் அரசுப் பள்ளிகளுக்கு தனியாகவும், அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும் நடத்தப்பட வேண்டும்.
- ஏதேனும் ஒரு போட்டியில் ஒரே ஒரு போட்டியாளர் மட்டுமே இருந்தால் அவர் அடுத்த நிலை போட்டிக்கு அனுப்பப்படுவார்.
- 1 முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கான வட்டார அளவிலான போட்டிகள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவாறு திட்டமிட்டு நடத்தப்படுதல் வேண்டும்.

| பிரிவு | வட்டார அளவிலான போட்டிகள் நடைபெறும் நாட்கள் | வெற்றியாளர்களின் விவரங்களை EMIS-தளத்தில் உள்ளீடு செய்வதற்கான கடைசி நாள் |
|---|---|---|
| 1 & 2 | 22.10.24 முதல் 24.10.24 வரை | 25.10.24 |
| 3 to 5 | 22.10.24 முதல் 24.10.24 வரை | 25.10.24 |
| 6 to 8 | 15.10.24 முதல் 17.10.24 வரை | 18.10.24 |
| 9 & 10 | 21.10.24 முதல் 24.10.24 வரை | 25.10.24 |
| 11 & 12 | 21.10.24 முதல் 24.10.24 வரை | 25.10.24 |

- அரசுப் பள்ளிகளுக்கு ஒரு அரசு பள்ளியிலும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு ஒரு அரசு உதவிப் பெறும் பள்ளியிலும் தனித்தனியே போட்டிகள் திட்டமிட்டு நடத்தப்படுதல் வேண்டும்.
- மாணவர்கள் எவரும் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.
- வட்டார அளவிலான போட்டிகளுக்கு மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக அழைத்துச்சென்று மீண்டும் கொண்டுவந்து சேர்த்தல் சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

www.Padasalai.Net

- ❖ வட்டார அளவிலான போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் (Consent Letter from Parent) கட்டாயமாக பெறப்படுதல் வேண்டும். அவ்வாறாக பெறப்படும் ஒப்புதல் கடிதங்களை முறையாக பராமரித்தல் சார்ந்த தலைமை ஆசிரியரின் பொறுப்பாகும்.
- ❖ வட்டார அளவிலான போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் மாணவ, மாணவியருடன் ஒரு ஆண் ஆசிரியர், ஒரு பெண் ஆசிரியை கட்டாயம் உடன் செல்லுதல் வேண்டும்.
- ❖ பார்வை-1ல் குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகளுக்கான பொதுவான விதிமுறைகள் மற்றும் ஒவ்வொரு போட்டிக்குமான மதிப்பீட்டு முறையினை பின்பற்றி போட்டியாளர்களின் கலைத்திறன் சார்ந்த வெளிப்பாட்டினை (Performance) ஒவ்வொரு போட்டிக்கான நடுவர்களும் மதிப்பிடுதல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு போட்டிக்குமான நடுவர்களை முன்கூட்டியே தேர்வு செய்து, போட்டிகள் நடைபெறும் நாட்களை அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து, ஒவ்வொரு போட்டிக்கும் உரிய நடுவர்கள் குறித்த நேரத்தில், சரியான போட்டியில் கலந்துகொள்வதை வட்டார அளவிலான அமைப்புக்குழு உறுதி செய்தல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு போட்டிக்கும் உரிய மதிப்பெண் தாள்களை அந்தந்த போட்டிகளுக்குறிய நடுவர்கள் முறையாக பராமரிக்க வேண்டும்.
- ❖ நடுவர் குழுவில் இடம் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்கள்/ தலைமையாசிரியர்கள் தாங்கள் நடுவர்களாக பங்குபெறும் போட்டிகளில் தங்கள் பள்ளிகளின் மாணவர்கள் பங்கேற்பின், சார்ந்த போட்டிகளில் அவர்கள் நடுவர்களாக நியமிக்கப்படுவதை தவிர்த்தல் வேண்டும்.
- ❖ இவ்வாறாக, வட்டார அளவில் இருந்து, முதல் மூன்று வெற்றியாளர்களை போட்டிக்கான நடுவர் குழு அமைத்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.
- ❖ நடுவர்களின் மதிப்பீட்டு படிவத்தில் அடித்தல், திருத்தல், வெள்ளை மை வைத்து அடித்தல் ஆகியன முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதன் எதிரே சார்ந்த நடுவரின் முழு கையொப்பம் கட்டாயமாக இடப்படுதல் வேண்டும்.

www.Padasalai.Net

- ஒவ்வொரு வட்டாரத்திலும், அரசுப் பள்ளி மாணவர்களுள், ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று வெற்றியாளருக்கான படைப்பினை ஐந்து நிமிட காணொலியாக தொகுத்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும். **ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற வெற்றியாளர், அடுத்தநிலைப் போட்டியான மாவட்ட நிலை போட்டிக்கு தகுதி பெற்றவர் ஆவார்.**
- அதேபோன்று, ஒவ்வொரு வட்டாரத்திலும், அரசு உதவிப்பெறும் பள்ளி மாணவர்களுள், ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று வெற்றியாளருக்கான படைப்பினை ஐந்து நிமிட காணொலியாக தொகுத்து EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும், **ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெற்ற வெற்றியாளர், அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட நிலை போட்டிக்கு தகுதி பெற்றவர் ஆவார்.**
- பார்வை – 3ல் குறிப்பிட்டுள்ளவாறு, நடுவர் குழு அமைத்து Intellectual Disability (ID), Autism Spectrum Disorder (ASD), Cerebral Palsy (CP) ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான வட்டார அளவிலான மாணவர்களின் தேர்வானது **22.10.2024 முதல் 24.10.2024** வரை நடைபெற்று அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட அளவிலான போட்டிக்கு, **ஒவ்வொரு போட்டியிலும் முதல் 5 இடங்களை பிடிக்கும் மாணவர்களின் தேர்வு செய்து அம்மாணவர்களின்** காணொலிகளை BEO login– ல், **24–10–2024 க்குள் EMIS–ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.**

**வட்டார அளவிலான அமைப்புக் குழு உறுப்பினர்கள் : (7 Members)**

வட்டார அளவில், கலைத்திருவிழாவினை நடத்துவதற்கு கீழே குறிப்பிட்டவாறு பத்து அமைப்புக் குழுக்களை தனித்தனியே அமைத்தல் வேண்டும். அதாவது 1 & 2 வகுப்பு பிரிவினருக்கு, அரசுப் பள்ளிகளுக்கு ஒரு அமைப்புக் குழுவினையும், அரசு உதவிப் பெறும் பள்ளிகளுக்கு ஒரு அமைப்புக் குழுவினையும், அதேபோன்று 3 முதல் 5–ம் வகுப்பு பிரிவினருக்கும், 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள பிரிவினருக்கும், 9 & 10 வகுப்பு பிரிவினருக்கும் மற்றும்

www.Padasalai.Net

11 & 12 வகுப்பு பிரிவினருக்கும் தனித்தனியே அமைப்புக் குழுக்களை அமைத்தல் வேண்டும்.

- ❖ போட்டி நடைபெறும் பள்ளியின் தலைமை ஆசிரியர் முதன்மை அமைப்பாளராக செயல்படுவார்.
- ❖ உதவி அமைப்பாளராக மேலும் ஒரு தலைமை ஆசிரியர் செயல்படுவார்.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி – 1 நபர்
- ❖ பெற்றோர் ஆசிரியர் கழகப் பிரதிநிதி – 2 நபர்கள்
- ❖ பள்ளி மேலாண்மைக் குழு தலைவர்/உறுப்பினர் – 2 நபர்கள்

வட்டார அளவிலான அமைப்புக் குழுவானது, வட்டார அளவில் நடைபெறும் போட்டிக்கான இடத்தினை தேர்வு செய்தல், போட்டிக்கான நடுவர் குழுவினை தேர்வு செய்தல், நடுவர்களின் மதிப்பெண் தாள்கள் முறையாகப் பராமரிக்கப்படுதல், போட்டியின் இறுதியில் வெற்றியாளர்களை முறையாக அறிவித்தல் போன்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

மேலும், ஒவ்வொரு போட்டிக்குமான முதல் மூன்று இடங்களை பிடிக்கும் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட Consolidated Mark Sheet படிவத்தில் வட்டாரக் குழு அமைப்பினரின் கையொப்பம் இடம் பெற்றிருத்தல் வேண்டும். இதன் பின்னரே வெற்றியாளர்களை அறிவித்தல் வேண்டும். ஒவ்வொரு போட்டிக்குமான வெற்றியாளர் அறிவிக்கப்பட்டவுடன் அன்றைய தினமே அப்போட்டிக்கான வெற்றியாளர்களின் தகவல்கள் EMIS தளத்தில் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும். இதனையும் வட்டார அளவிலான அமைப்புக் குழு உறுதி செய்தல் வேண்டும்.

அனைத்து நிலையிலான போட்டிகளும் அரசுப் பள்ளிகளுக்கு தனியாகவும், அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கு தனியாகவும் நடத்தப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு நிலையிலான போட்டிகளுக்கும் அந்தந்த போட்டிக்கான நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

www.Padasalai.Net

**வட்டார அளவில் போட்டிகள் நடத்துவதற்கான நிதி :**

❖ வட்டார அளவிலான போட்டிகளை நடத்துவதற்கு, ஒரு வட்டாரத்திற்கு ரூ.25000/- வீதம் நிதி ஒதுக்கீடு செய்து மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படும். இந்நிதியினை போட்டிகளை நடத்துவதற்கான செலவினங்களை (ஒலி-ஒளி அமைப்பு, பேனர், தேனீர், தண்ணீர், மாணவர்களுகான பயணப்படி மற்றும் நடுவர்கள் மதிப்பூதியம்) மேற்கொள்ள பயன்படுத்துதல் வேண்டும்.

❖ வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டி சார்ந்த அனைத்து வரவு செலவு கணக்குகளும் தனியாகப் பராமரிக்கப்பட்டு, முறையாகத் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை அறிக்கையினை பயன்பாட்டு சான்றுடன் (Utilisation Certificate) சார்ந்த வட்டார வளமையத்தில் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

**KALAITHIRUVIZHA 2024-25 - FUND RELEASE FOR BLOCK LEVEL COMPETITIONS**

| Sl No | Districts | No. of blocks | Unit cost Rs.0.25 lakh | Amount (Rs. In lakh) |
|---|---|---|---|---|
| 1 | ARIYALUR | 6 | 0.25 | 1.50 |
| 2 | CHENGALPATTU | 8 | 0.25 | 2.00 |
| 3 | CHENNAI | 10 | 0.25 | 2.50 |
| 4 | COIMBATORE | 15 | 0.25 | 3.75 |
| 5 | CUDDALORE | 14 | 0.25 | 3.50 |
| 6 | DHARMAPURI | 10 | 0.25 | 2.50 |
| 7 | DINDIGUL | 15 | 0.25 | 3.75 |
| 8 | ERODE | 14 | 0.25 | 3.50 |
| 9 | KALLAKURICHI | 9 | 0.25 | 2.25 |
| 10 | KANCHEEPURAM | 5 | 0.25 | 1.25 |
| 11 | KANNIYAKUMARI | 9 | 0.25 | 2.25 |
| 12 | KARUR | 8 | 0.25 | 2.00 |
| 13 | KRISHNAGIRI | 10 | 0.25 | 2.50 |
| 14 | MADURAI | 15 | 0.25 | 3.75 |
| 15 | MYLADUTHURAI | 5 | 0.25 | 1.25 |
| 16 | NAGAPATTINAM | 6 | 0.25 | 1.50 |
| 17 | NAMAKKAL | 15 | 0.25 | 3.75 |
| 18 | PERAMBALUR | 4 | 0.25 | 1.00 |
| 19 | PUDUKKOTTAI | 13 | 0.25 | 3.25 |
| 20 | RAMANATHAPURAM | 11 | 0.25 | 2.75 |
| 21 | RANIPET | 8 | 0.25 | 2.00 |
| 22 | SALEM | 21 | 0.25 | 5.25 |
| 23 | SIVAGANGAI | 12 | 0.25 | 3.00 |

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | TENKASI | 10 | 0.25 | 2.50 |
| 25 | THANJAVUR | 15 | 0.25 | 3.75 |
| 26 | THE NILGIRIS | 4 | 0.25 | 1.00 |
| 27 | THENI | 8 | 0.25 | 2.00 |
| 28 | THOOTHUKUDI | 13 | 0.25 | 3.25 |
| 29 | TIRUCHIRAPPALLI | 16 | 0.25 | 4.00 |
| 30 | TIRUNELVELI | 11 | 0.25 | 2.75 |
| 31 | TIRUPATHUR | 6 | 0.25 | 1.50 |
| 32 | TIRUPPUR | 14 | 0.25 | 3.50 |
| 33 | THIRUVALLUR | 14 | 0.25 | 3.50 |
| 34 | TIRUVANNAMALAI | 18 | 0.25 | 4.50 |
| 35 | TIRUVARUR | 10 | 0.25 | 2.50 |
| 36 | VELLORE | 8 | 0.25 | 2.00 |
| 37 | VILLUPURAM | 13 | 0.25 | 3.25 |
| 38 | VIRUDHUNAGAR | 11 | 0.25 | 2.75 |
| | **Grand Total** | **414** | **0.25** | **103.50** |

மேற்குறிப்பிட்ட அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்றி 1 முதல் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கான குறுவள அளவிலான போட்டிகளையும் மற்றும் 1 முதல் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான வட்டார அளவிலான போட்டிகளையும் திட்டமிட்டு நடத்திடும்படி அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாநில திட்ட இயக்குநருக்காக